# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 06 வியாழக்கிழமை 23.10.2025 கதிர் 34







## என்னைக் கொலை செய்தால் ஆவியாக வந்து பழிதீர்ப்பேன்!

### சபையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரை மிரட்டிய சாமர எம்.பி.



கொழும்பு, ஒக். 23

"என்னைக் கொலை செய்தால் ஆவியாக வந்தேனும் பழிவாங்குவேன் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சரே." - என்று புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே சாமர சம்பத் தஸநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

தனது உரையின்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தொடர்பில் சாமர எம்.பி. கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

"அமைச்சரே, எம்மை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முடியாது. முடிந்தால் எம்மைக் கொல்லுங்கள்.

7➤

# உங்களைப் பார்த்தாலே பயம்! ஆவியாக வந்துவிட வேண்டாம்!!

### சாமர எம்.பிக்கு நீதி அமைச்சர் பதிலடி



கொழும்பு, ஒக். 23

"உங்களின் முகத்தைப் பார்த்தாலே பயமாகத்தான் இருக்கின்றது. காலையில் பார்த்தால்கூட அப்படிதான். எனவே, தயவு செய்து ஆவியாக வந்துவிட வேண்டாம். நாம் உங்களைப் பாதுகாப்போம். அச்சப்பட வேண்டாம்." - என்று புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்துக்குப் பதிலடி கொடுத்தார் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய சாமர சம்பத் தஸநாயக்க எம்.பி., "என்னைக் கொலை செய்தால் ஆவியாக வந்தேனும் பழிவாங்குவேன்." எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நீதி அமைச்சர் சிரித்தபடி மேற்கண்டவாறு கூறினார்.

## போதை மாத்திரைகளுடன் இருவர் கைது!



யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணத்தில் நேற்று போதை மாத்திரை வியாபாரி ஒருவரும் சந்தேகநபர் ஒருவரும் என இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 110 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டன.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுபி பிரிவினருக்குக் கிடைக்கப்

7➤

## நெஞ்சு வலியால் மீனவர் மரணம்!




வடமராட்சி கிழக்கு, ஒக். 23

யாழ். வடமராட்சி கிழக்கில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலி காரணமாக கடலில் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி பகுதியைச் சேர்ந்த துரைராசா நியூட்டன் (வயது 44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

7➤

## தூக்குத் தண்டனை கைதிகளில் 5 மாணவர்களும் 21 பெண்களும்



கொழும்பு, ஒக். 23

பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குக் கட்டாயம் மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான ஜகத் வீரசிங்க தெரிவித்தார்.

நாவலப்பிட்டி பகுதியில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தூக்கிலிடப்படவுள்ள 805 ஆண்களும் 21

7➤

# விசேட பண்ட வரியை அதிகரிக்க அனுமதி

கொழும்பு, ஒக் .23

பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கிற்கான விசேட பண்ட வரியை அதிகரிக்க அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ.த சில்வா தலைமையில் அண்மையில் (21) நாடாளுமன்றத்தில் கூடிய அரசாங்க நிதி பற்றிய குழுவில், 2025ஆம் ஆண்டு பெரும் போகத்தில் உள்நாட்டு விவசாயிகள் சிறந்த விலையைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தும் நோக்கில் 2007ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க விசேட பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 2451ஃ10 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளை குறித்துக் கலந்துரையாடப்பட்டதுடன், இதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

விசேட பண்ட வரியை இரத்துச் செய்வது தொடர்பான திட்டம் இருந்தாலும் ஊழலுக்கு உள்ளாகும் வாய்ப்புகள் இருந்தபோதிலும், உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க அரசாங்கம் தொடர்ந்து அதைப் பயன்படுத்துகிறது என்பது இங்கு குறிப்பிடப்பட்டது.

இதற்கமைய இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் ஒரு கிலோவிற்கு ரூ. 10 (ரூ. 40 முதல் ரூ. 50 வரை) மற்றும் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் ஒரு கிலோவிற்கு ரூ. 20 (ரூ. 60 முதல் ரூ. 80 வரை) அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது ஓகஸ்ட் 26, 2025 முதல் அமலுக்கு வருகிறது.

இலங்கையின் வரிக்கட்டமைப்பு ஸ்திரமானதாகவும், எளிமையானதாகவும், வெளிப்படைத் தன்மை மிக்கதாகவும், வர்த்தகர்களால் கணிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என அங்கு வருகை தந்திருந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கு வர்த்தக அமைச்சுக்கும், நிதி அமைச்சுக்கும் தற்போதுள்ள சட்டங்களை தேசிய வரிக் கொள்கையுடன்



ஒருங்கிணைத்து விரிவாக நடைமுறைப்படுத்துமாறு குழு பரிந்துரைத்தது.

2027 முதல் 2030 வரையிலான கடுமையான நான்கு-வரிசை இறக்குமதி வரி திருத்தம் மற்றும் பாரா கட்டணங்களைப் படிப்படியாக நீக்குதல் உள்ளிட்ட முன்மொழியப்பட்ட வரி மறுசீரமைப்புக்களின் தாக்கங்கள் குறித்த முழுமையான மதிப்பீட்டை நடத்துமாறும் குழு அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியது. 2026 மார்ச் மாத இறுதிக்கு முன்னர் இதன் முன்னேற்றத்தை அறிவிக்குமாறும் குழு வலியுறுத்தியது.

பருவகாலத்திற்கான வரிகளில் தங்கியிருக்காது, ஐந்து வருட காலத்திற்குள் ஒட்டுமொத்த பெரிய வெங்காயத்தின் அறுவடையை அதிகரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு, கமநலத் திணைக்களத்திற்குப் பரிந்துரைத்தது.

“பிரபாஷ்வர” போன்ற ஈரப்பதம் மற்றும் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் களஞ்சியங்கள் மூலம் கொள்முதல் ஒப்பந்தங்கள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கும் விவசாயிகளுக்கு விலைகளை நிலைப்படுத்துவதற்கும் எதிர்கால ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பரந்த உத்தியின் ஒரு பகுதியாக இது இருக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரைத்தது.

மேலும், மதுவரி உற்பத்திக்கான வரிக்கொடுப்பனவுடன் தொடர்புபட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான (அத்தியாயம் 52) விதிகள் குறித்தும் குழு மதிப்பாய்வு செய்ததுடன் அனுமதி வழங்கியது.

இந்தப் புதிய விதிகள் பணம் செலுத்தாதவர்களின் உற்பத்தியை 30 நாட்களின் பின்னரும், விநியோகத்தை 90 நாட்களின் பின்னரும் நிறுத்தும்.

புதிய விதிகள் 30 நாட்களுக்குப் பிறகு பணம் செலுத்தாதவர்களின் உற்பத்தியை நிறுத்தும் மற்றும் 90 நாட்களுக்குப் பிறகு அனைத்து விநியோகம் மற்றும் விற்பனையையும் நிறுத்தும்.

தற்பொழுது காணப்படும் முறைக்கு அமைய பணம் செலுத்தாதவர்களிடமிருந்து 3ூ வட்டி அபராதம் விதிக்கப்படுகின்றமை போதுமானதாக இல்லையென்பதால் குறித்த விதி பண அறவீட்டுக்கான அமுலாக்கத்தை வலுப்படுத்துவதாக அமைகின்றது.

இக்கூட்டத்தில் பிரதியமைச்சர்களான சதுரங்க அபேசிங்க, நிஷாந்த ஜயவீர, அர்கம் இலியாஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான (சட்டத்தரணி) ரவூப் ஹக்கீம், ஹர்ஷன ராஜகருணா, நிமல் பலிஹேன, சித்ரால் பெர்னாந்து, (சட்டத்தரணி) விஜேசிறி பஸ்நாயக்க, திலின சமரக்கேன், சம்பிக்க ஹெட்டிஆரச்சி மற்றும் (சட்டத்தரணி) லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.எ.விமலேந்திரராஜா, வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம், மதுவரித் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

(ஐ)



# வரி விதிப்பதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்படுகின்றனவா?



கொழும்பு, ஒக் .23

உள்நாட்டு விவசாயிகளை பாதுகாப்பதற்கும், விலை போட்டி தன்மை மூலம் விவசாயிகளுக்கு பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்து, வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தினாலும், இதன் விளைவாக, உள்நாட்டு உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காய செய்கைகளில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் போலவே நுகர்வோரும் உண்மையிலேயே பாதுகாக்கப்படுகின்றனரா என்ற பிரச்சினை காணப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (22) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது நாட்டில் 20,000 உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளும், பெரிய வெங்காயத்தை உற்பத்தி செய்யும் விவசாயிகள் சுமார் 7,000 பேரளவிலும் காணப்படுகின்றனர். இந்த செயல்முறையின் மூலம், ஒரு கிலோ உருளைக்கிழங்கிற்கான வரி 60 ரூபாவிலிருந்து, 80 ரூபாகவும், ஒரு கிலோ பெரிய வெங்காயத்திற்கான வரி 10 ரூபாவிலிருந்து, 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இங்கு பிரச்சினை என்னவென்றால், உள்நாட்டு உருளைக்கிழங்கு விவசாயிகளின் உற்பத்திகள் மீதான மொத்த விலை 160 ரூபாவாலிருந்து, 220 ரூபாவாக அதிகரிக்கப்பட்டாலும், 160 ரூபாவாக்கே கொள்வனவு செய்யப்படுகின்றன. ஒரு கிலோ உருளைக்கிழங்கு உற்பத்திக்கு 210 ரூபா செலவாகின்றமையால், உற்பத்தி விலைக்கும், உள்நாட்டு விவசாயியிடமிருந்து கொள்வனவு செய்யும் விலைக்கும் இடையே வித்தியாசம் காணப்படுகின்றன. எனவே, இந்த வரி விதிப்பதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்படுகின்றனவா என்ற பிரச்சினையும் காணப்பட்டு வருகின்றன என தெரிவித்தார். (ஐ)

## மதுவரி பெற வேண்டுமாயின் மதுபானங்களின் விலையை குறைக்க வேண்டும்! சாமர சம்பத் வலியுறுத்து



கொழும்பு, ஒக் .23

வரியை பெற வேண்டுமாயின் அனைவரும் மதுபானம் அருந்த வேண்டும். அதற்கு விலையை குறைக்க வேண்டும் என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

வெலிகம பிரதேச சபையின் தலைவர் பகிரங்கமாக கொலை செய்யப்பட்டுள்ளார். இவரது கடந்த காலங்கள் பற்றி தற்போது சமூக வலைத்தளங்களில் பல விடயங்கள் பரிமாற்றப்படுகின்றன.

88 மற்றும் 89 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சிறைச்சாலைகளில் இருந்தவர்கள் இன்று அமைச்சர்களாக உள்ளார்கள். எமது பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் குறைகளை சுட்டிக்காட்டுகிறோம். எமக்கு ஏதும் நேர்ந்தால் அரசாங்கம் அதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு மீதான வரியை விதிக்குமாறு மூன்று மாதங்களுக்கு முன்னரே நான் குறிப்பிட்டேன். காலநிலை சீர்கேட்டுக்கு மத்தியில் அரசாங்கம் தற்போது வரி விதித்துள்ளது.

இதனால் விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் தான் அரசாங்கம் தீர்மானங்களை எடுக்கிறது.

பொன்னி சம்பா மற்றும் பிறிதொரு வகையான அரிசியை இறக்குமதி செய்ய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு இணக்கமாக வர்த்தகர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஐந்து நாட்களுக்குள் இந்தியாவில் இருந்து கொழும்புத் துறைமுகத்துக்கு அரிசி தொகை கொண்டு வரப்பட்டுள்ளது.

இதிலும் ஒரு முறைகேடு இடம்பெற்றுள்ளது. வர்த்தக அமைச்சருக்கு இணக்கமானவர்களுக்கு மாத்திரமே அரிசி இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மதுபானங்களுக்கு வரி விதிப்பது பற்றி தற்போது பேசப்படுகிறது. வரி பெறுவதாயின் முதலில் மக்கள் மதுபானம் அருந்த வேண்டும். அதிவிசேசம் சாரய போத்தல் ஒன்றின் விலை 4600 ரூபாய், எவ்வாறு மது அருந்துவது. ஆகவே வரியை பெற வேண்டுமாயின் அனைவரும் மதுபானம் அருந்த வேண்டும்.

மதுபான போத்தல் ஒன்றின் விலையை 2500 ரூபாவாக குறைக்குமாறு நான் கடந்த அரசாங்கத்திலும் யோசனை முன்வைத்தேன். ஆனால் ஏதும் நடக்கவில்லை. இன்று கிராமங்களில் கசிப்பு உற்பத்தி தீவிரமடைந்துள்ளது. ஆகவே மதுபானங்களின் விலைகளை குறையுங்கள்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க அனைவரும் ஊழல்வாதிகள், 66 சதவீதமான அரச நிறுவனங்கள் மோசடியானவை என்று குறிப்பிடுகிறார்.

அனைத்து அரச நிறுவனங்களும் மோசடியாயின் அவரது இரண்டு மனைவியரும் தொழில் புரிந்த இலங்கை மத்திய வங்கி மோசடியில்லையா, ஆகவே யார் மோசடி, எந்த நிறுவனம் மோசடியானது என்பதை பணிப்பாளர் நாயகம் பெயர் விபரத்துடன் வெளியிட வேண்டும் என்றார். (ஐ)

## பத்மேவின் கைப்பேசியில் இருந்தவை தொடர்பில் பியூமியிடம் விசாரணை



கொழும்பு, ஒக் .23

பிரபல நடிகையான பியூமி ஹன்சமாலியிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று (21) சுமார் இரண்டு மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

கெஹெல்பத்தர பத்மேவின் கைப்பேசியில் இருந்த புகைப்படம் ஒன்று தொடர்பிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பியூமி ஹன்சமாலி மற்றும் நாட்டின் பல பிரபல நடிகைகளுடன் கெஹெல்பத்தர பத்மேவும் புகைப்படத்தில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பத்மே மற்றும் பியூமி ஹன்சமாலிக்கு இடையேயான பல தொலைபேசி உரையாடல்களும் அவரது கைப்பேசியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

குறித்த படங்களில் இருக்கும் நடிகைகளிடமும் எதிர்காலத்தில் வாக்குமூலம் பெறப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## “கொழும்பு நகரில் நடைபாதை , குடை கடைகளுக்கு இடமில்லை”

கொழும்பு நகரில் நடைபாதையில் ஒரு கடை அல்லது பாதசாரி குடை கடைக்கு இடமில்லை என்றும், அரசியல் அதிகாரத்தையோ அல்லது வேறு எந்த சக்தியையோ இதுபோன்ற முன்னேற்றங்களைச் செய்ய ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் என்றும் கொழும்பு மாநகர சபையின் மேயர் திருமதி வ்ராய் கெல்லி பால்தாசர் கூறியுள்ளார்.

கொழும்பு மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மேற்படி நகராட்சியின் அக்டோபர் மாத கவுன்சில் கூட்டத்தில் மேயர் வ்ராய் கெல்லி பால்தாசர் இவ்வாறு கூறினார். கொழும்பு மாநகர சபையில் நடைபாதையில் கடைகள் மற்றும் பிற கட்டுமானங்கள் கட்டப்படுவதால், மக்கள் பிரதான சாலையில் நடக்க வேண்டியுள்ளது என்றும், மக்கள் பிரதான சாலையில் நடந்து செல்லும்போது ஏதேனும் விபத்து ஏற்பட்டால், அந்தப் பொறுப்பும் நகராட்சி மன்றத்தின் மீது விழும் என்றும், நகரத்தில் இதுபோன்ற கட்டுமானங்கள் குறித்து முழுமையான அறிக்கை கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேயர் கூறினார். கொழும்பில் நடந்த மாவட்டக் குழுக் கூட்டத்தில் நகரத்தை அழகுபடுத்துவது தொடர்பாக இந்த நிலைமை விவாதிக்கப்பட்டதாகவும், நடைபாதையில் பணிபுரியும் மக்களுக்கு ஓர் இடத்தை வழங்குவதற்கும் அந்த சூழ்நிலையில் நடவடிக்கை எடுப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சமிந்த அலுத்கெதர சபையில் முன்வைத்த பின்வரும் கேள்விக்கு மேயர் வ்ராய் கெல்லி பால்தாசர் பதிலளித்து கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)



## லசந்த கொலை : சிசிடிவி காட்சிகளைப் பயன்படுத்தி விசாரணை

வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் கொலை நடந்த போது அப்பகுதியில் இருந்த சிசிடிவி காட்சிகளைப் பயன்படுத்தி விசாரணையைத் தொடங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, நான்கு பொலிஸ் குழுக்கள் மூலம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜயலத் தெரிவித்தார்.

வெலிகம பிரதேச சபையில் வெள்ளை சட்டை அணிந்து கருப்பு நிற முகக்கவசத்துடன் வந்த துப்பாக்கிதாரி, தலைவரின் அலுவலகத்திற்குள் நுழைந்தார். துப்பாக்கிதாரி உத்தியோகபூர்வ இருக்கையில் இருந்த தலைவர் லசந்த விக்ரமசேகரவை நான்கு முறை சுட்ட பின்னர், மற்றொரு நபருடன் மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்லும் விதம் சிசிடிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் பலத்த காயமடைந்த பிரதேச சபைத் தலைவர், மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். துப்பாக்கிச் சூட்டில் பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவின் தலை, கழுத்து மற்றும் மார்பு பகுதிகளில் காயம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக இதுவரை எந்தவொரு சந்தேகநபரும் கைது செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது. (ஐ)

# கல்லை கடவுளாக மாற்றத் தெரிந்தவன் மனிதனாக மாற மறந்து விட்டான்: கரூர் சம்பவத்தில் அழுதது குறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பேட்டி



தமிழ் வளர்ச்சித்துறை சார்பில், மாணவ - மாணவிகளுக்கான 'தமிழ் முழக்கம்' மேடைப்பேச்சு ஆளுமைத் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் பன்னாட்டு பயிலரங்க தொடக்க விழா, மதுரை உலக தமிழ் சங்கத்தில் நேற்று நடந்தது. இந்நிகழ்ச்சியை பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். பின்னர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிருபர்களிடம் கூறுகையில், "தமிழ் முழக்கம் மேடைப்பேச்சு ஆளுமைத்திறன் மேம்பாட்டு பயிற்சியில் தேர்வு செய்யப்படும் மாணவர்களை வைத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் மற்ற மாணவர்களுக்கு தூதுவர்களாக பயிற்சி அளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். மாணவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்க இது உதவும்.

மழைக்காலம் என்பதால் பள்ளி வளாகங்களில் தேங்கியுள்ள மழை நீரை உடனடியாக அகற்ற தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல், பள்ளிகளில் மின் கசிவுகள் உள்ளிட்ட மின்சாரம் சார்ந்த பிரச்னைகள் ஏதும் உள்ளதா என ஆய்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. உணர்ச்சிகளும், அறிவும் சார்ந்து சமமான பேச்சுகள் அமைந்திட வேண்டும். இது பேச்சாளர்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கும் இதை எடுத்துக்காட்டாக கூறலாம்" என்றார்.

அப்போது, கரூர் கூட்டநெரிசல் உயிரிழப்புச் சம்பவத்தின் போது அழுதது குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அமைச்சர், "உணர்ச்சிகள் அதிகமாகி அறிவு குன்றி இருந்தால் விலங்குக்கு சமம். அறிவு அதிகமாகி உணர்ச்சிகள் குன்றி இருந்தால் மரத்திற்கு சமம் என வள்ளுவர் கூறியுள்ளார், அந்த குறளை மேற்கோள்காட்டியே பார்க்கிறேன்.

முதலில் நான் மனிதன். ஒரு கல்லை கடவுளாக மாற்றத் தெரிந்தவன், ஒரு மனிதனாக மாற மறந்து விட்டான்" என்று தெரிவித்தார். (ஐ)

# திருச்செந்தூர் முருகன் கோயிலில் கந்தசஷ்டி விழா 27 சூரசம்ஹாரம் 28 திருக்கல்யாணம்



திருச்செந்தூர் முருகன் கோயிலில் பிரசித்திப் பெற்ற கந்தசஷ்டி விழா நேற்று காலை யாகசாலை பூஜையுடன் தொடங்கியது. வரும் 27ம் தேதி சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் நடக்கிறது.

அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் முருகன் கோயில் ஸ்தல வரலாற்றை உணர்த்தும் திருவிழா, கந்தசஷ்டி ஆகும். இவ்வாண்டு கந்தசஷ்டி திருவிழா நேற்று காலை யாகசாலை பூஜையுடன் தொடங்கியது. விழாவை முன்னிட்டு கோயில் நடை அதிகாலை 1 மணிக்கு திறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 2 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது. காலை 6 மணியளவில் சுவாமி ஜெயந்திநாதர் வள்ளி, தெய்வானையுடன் யாகசாலையில் எழுந்தருளினார்.

யாகசாலையில் கும்பங்கள் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கோயில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ராமு ஆகியோர் பூஜை நடத்துவதற்கான நிர்வாக அனுமதியை காப்பு கட்டிய சோமஸ்கந்தர் பட்டருக்கு வழங்கினர். தொடர்ந்து யாகசாலையில் பூஜைகளாகி, சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் நடைபெற்றது. மதியம் மூலவருக்கு உச்சிக்கால அபிஷேகம் முடிந்து தீபாராதனை நடைபெற்றவுடன், யாகசாலையில் மகா தீபாராதனை நடைபெற்றது. அதன்பின் சுவாமி ஜெயந்திநாதர் யாகசாலையில் இருந்து தங்கசப்பரத்தில் வள்ளி, தெய்வானையுடன் எழுந்தருளி பிரகாரம் வழியாக பக்தர்கள் வேல்வகுப்பு, வீரவாள் வகுப்பு பாட சண்முகவிலாச மண்டபத்தை வந்தமர்ந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

மாலை திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் சுவாமிக்கு அபிஷேகம், அலங்காரம் நடந்து, சுவாமி தங்க ரதத்தில் எழுந்து கிரிவீதி வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார். அக்.27ம் தேதி சூரசம்ஹார விழாவை முன்னிட்டு கோயில் நடை அதிகாலை 1 மணிக்கு திறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம், 2 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம், காலை 9 மணிக்கு உச்சிக்கால அபிஷேகம், மதியம் 1 மணிக்கு சாயரட்சை தீபாராதனை, மாலை 4.30 மணிக்கு கோயில் கடற்கரையில் சூரசம்ஹாரம் நடைபெறுகிறது. அக்.28ம் தேதி திருக்கல்யாணம் வைபவம் நடக்கிறது.

கடலில் புனித நீராடி விரதம் துவங்கிய பக்தர்கள்

கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு நேற்று அதிகாலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறில் புனித நீராடியும், சிறுகுழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையிலான பக்தர்கள் கிரிப்பிரகாரத்தில் அங்கப்பிரதட்சணம் செய்தும் தங்கள் விரதத்தை துவக்கினர். இதனால் கோயில் வளாகமே பக்தர்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

கட்டண தரிசனம் ரத்து

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின் படி இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு சட்டமன்றத்தில் அறிவித்த திருவிழா காலங்களில் கட்டண தரிசனம் ரத்து என்ற அறிவிப்பின்படி திருச்செந்தூரில் கந்தசஷ்டி விழா நாட்களில் ரூ.100 கட்டணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதன்படி பக்தர்கள் பொது தரிசனம், மூத்த குடிமக்கள் வழி மற்றும் விரைவு தரிசன பாதையிலும் இலவசமாக சுவாமி தரிசனம் செய்தனர். கந்தசஷ்டி விழா நாட்களில் யாகசாலையில் சிறப்பு அனுமதி கட்டணமாக ரூ.3 ஆயிரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பழநி மலைக்கோயிலிலும் கோலாகலம்

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள முருகனின் மூன்றாம் படை வீடான, பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் 7 நாட்கள் நடைபெறும் இவ்விழா நேற்று (அக். 23) மலைக்கோயிலில் உச்சிகாலத்தில் காப்புக் கட்டுதலுடன் துவங்கியது. முன்னதாக மூலவருக்கு 16 வகை அபிஷேகம் மற்றும் சிறப்பு அலங்காரம், தீபாராதனை நடந்தது. தொடர்ந்து பக்தர்களின் அரோகரா கோஷம் முழங்க மூலவருக்கு காப்புக் கட்டப்பட்டது. பின்னர் சின்னக்குமாரர், வள்ளி - தெய்வானை சமேத சண்முகர், வீரபாகு, நவவீரர்கள், துவார பாலகர், மயில், சேவல், தீப ஸதம்பத்திற்கு காப்புக் கட்டப்பட்டது. தொடர்ந்து பக்தர்கள் காப்புக் கட்டி விரதமிருக்க துவங்கினர். முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் அக். 27ம் தேதியும் நடைபெறும். 28ம் தேதி மலைக்கோயிலில் காலை 10.30 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் தனுசு லக்னத்தில் வள்ளி - தெய்வானை சமேத சண்முகர் திருக்கல்யாண நிகழ்வு நடைபெறும்.

இரவு 7 மணிக்கு மேல் 8 மணிக்குள் ரிஷப லக்னத்தில் பெரியநாயகி அம்மன் கோயிலில் வள்ளி - தெய்வானை சமேத முத்துக்குமார சுவாமி திருக்கல்யாணம் நடைபெறும். கந்த சஷ்டியையொட்டி பழநி கோயில் யானை கஸ்தூரி நேற்று அதிகாலை யானை பாதை மூலமாக மலைக்கோயில் சென்றடைந்தது. அங்கு யானைக்கும் காப்புக் கட்டப்பட்டது.

இதேபோல், முருகனின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம், நான்காம் படை வீடான சுவாமிமலை, ஆறாம் படை வீடான பழமுதிர்சோலை கோயில்களில் கந்த சஷ்டி பெருவிழா நேற்று காலை காப்புக்கட்டுதலுடன் கோலாகலமாக தொடங்கியது. திருப்பரங்குன்றத்தில் சுமார் 5 ஆயிரம் பக்தர்கள் 27ம் தேதி வரை கோயிலில் தங்கி விரதமிருந்து முருகனை வழிபட உள்ளனர். இந்த கோயில்களிலும் அக்.27ல் சூரசம்ஹாரம், 28ல் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. (ஐ)



# ஒருபோதும் உண்மை பேசாத தி.மு.க., நயினார் நாகேந்திரன்

ஒரு போதும் உண்மை பேசாத திமுக என நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது

டெல்டா மாவட்டத்துக்கு சொந்தக்காரர் என முதல்வர் ஸ்டாலின் சொல்லிக் கொள்கிறார். ஆனால், டெல்டாவில் 12 லட்சம் ஹெக்டேர் நெல் பயிர்கள், நீரில் மூழ்கி உள்ளன. ஏற்கனவே கொள்முதல் செய்த நெல்லை வைக்க இடமில்லை.

அறுவடை செய்யப்பட்ட நெல்லில், 22 சதவீத ஈரப்பதம் இருக்கும். அதை, அப்படியே கொள்முதல் செய்தால் தான், விவசாயிகள் லாபம் பெறுவர். ஆனால், ஒரு மூட்டை நெல்லை கொள்முதல் செய்ய, அதிகாரிகள் 40 ரூபாய் லஞ்சம் கேட்கின்றனர்.

உண்மையை ஒருபோதும் தி.மு.க., பேசுவதில்லை. எப்போது கேட்டாலும், 'மழைநீர் வடிகால் பணிகள் 95 சதவீதம் முடிந்து விட்டது எத்தனை பெரிய மழையையும் அரசு எதிர்கொள்ளும்' என, முதல்வரும் அமைச்சர்களும் திரும்பத் திரும்ப சொல்கின்றனர்.

ஆனால், எப்போது மழை பெய்தாலும், வெள்ளத்தில் வீடுகள் மூழ்குவது தொடர்கிறது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார். (ஐ)




# மறுகன்னத்தை காட்டத்தான் வேண்டுமா?

வன்முறைக்கு வன்முறை தீர்வல்ல என்பது முக்கியமான வாசகமேயானாலும் வன்முறையை எப்படி எதிர்கொள்ள வேண்டும்? ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் காட்டித்தான் ஆக வேண்டுமா என்ற கேள்வி வரும்போது, அப்படி மறுகன்னத்தைக் காட்ட வேண்டிய அவசியமில்லை என்றே எனக்குத் தோன்றும்.

வன்முறை எல்லாக்காலகட்டங்களிலும் பல்வேறு உருவங்களில் இருந்து கொண்டேதான் இருக்கிறது. காந்தியின் அகிம்சை வழியில் நம்பிக்கையற்ற பகத்சிங் தன்னை ஒரு தீவிரவாதி என்றே அறிவித்துக்கொண்டார். அந்தக் காலக்கட்டத்தில் ஒரு செயலில் தீவிரமாக ஈடுபடுபவர்கள் தீவிரவாதியென அழைக்கப்பட்டார்கள். இன்று அதன்பொருள் மாறிவிட்டது. தன்னை வன்முறையாளன் அல்லது தீவிரவாதி என்று சொல்வதில் எந்தக் கீழ்மையும் இல்லையென்றே நம்பினார் பகத்சிங்.

குடித்துவிட்டு வீட்டிலுள்ள பெண்கள் மீதும் குழந்தைகள் மீதும் வன்முறையைக் கட்டவிழ்க்கும் சில ஆண்களைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். மது அருந்துவது அவரவர் தனிப்பட்ட விருப்பம் சார்ந்தது. ஆனால், தன்னைச் சார்ந்தவர்களை அதுவும் தன்னைவிட உடலால், பொருளாதாரத்தால் பலவீன மானவர்கள் மீது குடி என்ற பெயரில் வன்முறைச் செய்பவர்களை மன்னிக்கவே இயலாது.

பக்கத்து வீட்டில் வேலை செய்யும் அம்மா எப்போதாவது என்னிடம் பேசுவார். சமீபத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தபோது, குடித்துவிட்டுத் தன் கணவன் செய்த பல வன்முறையைப் பட்டியலிட்டுக்கொண்டிருந்தார். வீட்டு வேலை செய்து கண்ணியமான முறையில் பணம் சம்பாதித்து வருகிறார். ஒரு முறை அவர் கணவர் குடித்துவிட்டு, கத்தியை வைத்துக்கொண்டு குத்திவிடுவேன் என்ற மிரட்ட, காவல்நிலையம் வரை சென்று வந்திருக்கிறார் அந்த அம்மா. ஆனால், இந்தச் சமூகம் தரும் அழுத்தத்தால் பிள்ளைகள் இருக்கும் காரணத்தினால் அத்தனை வன்முறைகளுக்குப் பிறகும் அந்த ஆடவனோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.



அவரைப்போல இவ்வாழ்வில் எத்தனை எத்தனை பெண்கள் குடும்ப வன்முறைகளைச் சகித்துக் கொண்டிருக்கிறார்கள் - வாழவே பிடிக்கவில்லை என்று கூறியிருந்த அம்மாவுக்கு ஏதோ சமாதானம் கூறி அனுப்பி வைத்தாலும் இந்த வன்முறையை எல்லாம் பெண்கள் ஏன் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று மனம் துடித்துக்கொண்டேயிருக்கிறது.

அகிம்சை வழியில் நடக்க மிகப்பெரிய மனத்திடம் வேண்டும் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், ஆதிக்கப் பிரிவில் உள்ள ஒருவன் சாமானியனை ஒரு கன்னத்தில் அறைந்தால் இன்னும் எத்தனை காலத்திற்கு மறுகன்னத்தைக் காட்டிக் கொண்டிருக்க வேண்டும்?

கற்பி, ஒன்றுசேர், புரட்சிசெய் என்ற அண்ணலின் வரிகள் என்னைப் போலவே உங்கள் காதுகளிலும் ஒலிக்கிறதா?

மனிதன் ஒரு சமூக விலங்கு. ஆனால், எந்த விலங்கிடமும் இல்லாத சக மனிதர்களையே ஒடுக்கும் ஆதிக்க உணர்வு மனிதர்களிடம் உள்ளது. இன்னும் மறுகன்னத்தைக் காட்டிக்கொண்டிருந்தால் நம்மை மிதித்து இல்லாமல் செய்துவிடும் இந்தச் சமூக விலங்குகளிடம் நாம் எதிர்ப்புணர்வைக் காட்ட வேண்டியது மிகுந்த அவசியமாகிறது.

செய்தித்தாள்களும் தொலைக்காட்சி செய்திகளும் பல்வேறு இடங்களில் நடந்த கொலை தாக்குதல்களையும் வன்முறையையும் செய்திகளாக நமக்குக் காண்பித்துக்கொண்டிருக்கிறது. ஒருவேளை மனிதர்கள் வன்முறையை உள்ளுக்குள் ரசிக்கிறோமா என்கிற எங்கோ படித்த ஓர் உளவியல் பார்வை நினைவுக்கு வருகிறது. போர் குறித்த செய்திகளையும் வன்முறையையும் நேரிலோ அல்லது தொலைக்காட்சியிலோ காணும் போது ஏதோ ஒரு பதைபதைப்புடன் நாம் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஒருவேளை அந்தப் பதைபதைப்பை மனிதர்கள் உள்ளார்ந்து ரசிக்கிறோமா? நமக்குள் இருக்கும் ராட்சசக் குணங்களோடுதான் நாம் வாழ்கிறோமா? ஏதோ ஒரு மெல்லிய நுனியில் வன்முறையின் மீதான நம் ரசனையைத்தான் திரைப்படங்களில் வன்முறைக் காட்சிகளின் மூலம் கண்டு களிக்கிறோமா? அதீத சத்தத்துடன் ரத்தம் கசியும் சண்டைக்காட்சிகளை அதனால் தான் மீண்டும் மீண்டும் பார்க்கிறோமா? சண்டைக் காட்சிகள் திரைப்படங்களில் இன்றியமையாத ஒன்றாகத்தானே மாறிவிட்டது. இப்படியான பல்வேறு கேள்விகள் மனதை ஆட்கொள்கின்றன.

தெரு சண்டைகளை நம்மில் பலர் பார்த்திருப்போம். தெருவில் நடக்கும் கணவன் மனைவி சண்டைகள், தெருக் குழாயடி சண்டைகள் போன்றவற்றைப் பார்த்திருப்போம். அதில் நடுநிலைமையே வகித்திருப்போம். அடிப்பார் பக்கமோ அடி வாங்குபவர் பக்கமோ சாராத மையமாக இருதரப்புக்கும் நல்லவராக இருந்திருப்போம். பலருக்கும் அது வெறும் பொழுதுபோக்கு. கடலை, வானத்தைப் பார்ப்பது போல பிறர் சண்டைகளைக் காண்பது பலருக்கும் பொழுது போக்காகவே இருக்கிறது.

இன்றைய தலைமுறைப் பிள்ளைகளிடம் முக்கியமாக இணையவழி விளையாட்டுகளில் வன்முறையே பிரதானமாக இருக்கிறது. துப்பாக்கியால் சுடும் விளையாட்டு, எல்லோரையும் சுடுதல், சும்மாவே சுடுதல், விளையாட்டில் வரும் பொம்மைகளின் ஆடையை அவிழ்த்து சுடுதல் இப்படியெல்லாம் பல்வேறு விளையாட்டுகளை இளம் பிள்ளைகள் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். வன்முறை என்பதை வாழ்வின் ஓர் அங்கமாக இவர்கள் இளம்பிராயத்திலேயே கற்றுக் கொள்வதற்கான நிலையையன்றி வேறு எதை உருவாக்கியிருக்கிறது இந்தச் சூழல்.

பள்ளி மாணவர்களில் சிலர் ஆசிரியர்களிடம் மிக மோசமாக நடந்துகொள்ளும், மிக மோசமான வார்த்தைகளால் ஆசிரியர்களிடம் பேசும் சில காணொளிகள் சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து பகிரப்படுகின்றன. உண்மையில் அடிப்படையிலேயே குழந்தைகள் வன்முறையாளர்களாக வளர்கிறார்களா? இந்தச் சமூக அமைப்பு குடும்பங்களின் மூலமாகவும் திரைப்படங்களின் மூலமாகவும் இதுபோன்ற இணையவழி விளையாட்டுகளின் மூலமாகவும் வன்முறைகளைத் தெரிந்தோ தெரியாமலோ விதைத்துக் கொண்டேயிருக்கிறதா ?

இவ்வளவு சட்டங்களிலிருந்தும் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்தபாடில்லை. இவ்வளவு இலக்கியங்கள் இருந்தும் மனிதம் என்பது புத்தகத்தில் மட்டும்தான் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதா என்கிற கேள்வி மனதை வாட்டுகிறது.



பழைய சிவாஜிகணேசன் படத்தில் இப்படி ஒரு வசனம் வரும், “ விலங்குகள்கூடத் தன் பசிக்காகத்தான் பெரும்பாலும் பிற விலங்குகளை வேட்டையாடுகிறது. ஆனால், மனிதன் மட்டும்தான் தன் வெறிக்காகச் சக மனிதனையே வேட்டையாடுகிறான்.” உண்மைதானே? அது வெறும் வெறி. ரத்தவெறியன்றி வேறேது?

அமெரிக்காவின் டெக்சாஸில் இளம் வாலிபன் ஒருவன் 18 சிறுவர்களையும் 3 பெரியவர்களையும் தன் சொந்த பாட்டி உட்பட 21 பேர்களைத் துப்பாக்கிக்கு இரையாக்கியிருக்கிறான். சிலர் படுகாயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இளைஞர்களின் கையில் துப்பாக்கி எப்படி வருகிறது? இவ்வளவு சுலபமாக அவர்களால் துப்பாக்கிகளைச் சந்தைகளில்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# கச்சா எண்ணெய் ஏற்றிவந்த டேங்கர் வெடித்ததில் 39 பேர் உயிரிழப்பு: 60-க்கும் மேற்பட்டோர் படுகாயம்



நைஜீரியாவின் நைஜர் மாநிலத்தில் கச்சா எண்ணெய் ஏற்றிவந்த டேங்கர் வெடித்ததில் 39 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 60-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர். நைஜீரியாவின் நைஜர் மாகாணம் பீடாவில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றிக்கொண்டு டேங்கர் லாரி ஒன்று அகே நோக்கி சென்று கொண்டிருந்தது. அந்த டேங்கர் லாரி அதிகாலை 4 மணியளவில் எசான் அருகே சென்றபோது பள்ளத்தில் விழுந்து தலைகுப்புற கவிழ்ந்தது. இதுகுறித்து தகவல் அறிந்த எசான் சுற்றுவட்டார பகுதி மக்கள் விபத்திற்குள்ளான லாரியில் இருந்து சாலையில் ஆறாக ஓடிய எண்ணெயை சேகரித்தனர். அப்போது கண் இமைக்கும் நேரத்தில் அந்த டேங்கர் லாரி பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதில் எண்ணெய் சேகரித்து கொண்டிருந்த அப்பாவி பொதுமக்கள் உள்பட 39 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். நைஜீரியாவில் உள்ள மோசமாகப் பராமரிக்கப்படும் சாலைகளால் டேங்கர் லாரி விபத்துக்கள் அடிக்கடி நிகழ்கின்றன. மேலும் இந்த விபத்துக்கள் பெரும்பாலும் அதிக வேகத்தாலும், போக்குவரத்து விதிகளை புறக்கணிப்பதாலும் ஏற்படுவதாக கூறப்படுகிறது. அங்குள்ள மக்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக, இதுபோன்ற விபத்துகளின் போது தங்கள் உயிரைப் பணயம் வைத்து எரிபொருளைச் சேகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. (ஐ)

### ஷேக் ஹசீனா ஆட்சியில் நடந்த கொலைகள்

## 15 ராணுவ அதிகாரிகளுக்கு சிறை: வங்கதேச குற்றவியல் தீர்ப்பாயம் உத்தரவு




டாக்கா:வங்கதேச மாஜி பிரதமர் ஷேக் ஹசீனா ஆட்சியில்,காவலில் இருந்த போது காணாமல் போனவர்கள், கொலைகள், சித்ரவதை ஆகியவற்றில் தொடர்புடைய 15 ராணுவ அதிகாரிகளை சிறையில் அடைக்க சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. வங்கதேசத்தில், கடந்த ஆண்டு நடந்த மாணவர்கள் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கொல்லப்பட்டனர். இந்த போராட்டம் மக்கள் எழுச்சியாக மாறியதால் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறினார். இதை தொடர்ந்து பிரபல பொருளாதார அறிஞர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு பொறுப்பேற்றது.

கடந்த ஆட்சியின் போது, அரசியல் எதிரிகளை, கடத்துதல், சித்தரவதை செய்தல், ஆட்களை கட்டாயமாக காணாமல் ஆக்குதல் ஆகிய குற்றச்சாட்டுகள் குறித்து வங்கதேசத்தின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் விசாரித்து வந்தது. இந்த வழக்கில் 15 ராணுவ அதிகாரிகள் மற்றும் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்ட, 14 பேருக்கு கைது வாரண்ட் பிறப்பித்திருந்தது. இந்த நிலையில், ராணுவ அதிகாரிகள் 15 பேரை குற்றவியல் தீர்ப்பாயத்தில் நேற்று ஆஜர்படுத்தினர். அவர்களை ராணுவ கண்டோமென்ட்டில் உள்ள கிளை சிறைசாலையில் அடைக்கும்படி சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து தலைமை வழக்கறிஞர் தாஜுல் இஸ்லாம்,"கட்டாயமாக காணாமல் போனவர்கள், கொலைகள் மற்றும் காவலில் இருந்த சித்திரவதைகள் தொடர்பாக ஆஜர்படுத்தப்பட்ட 15 ராணுவ அதிகாரிகளை சிறைக்கு அனுப்ப தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

தீர்ப்பாயம் எந்த ஜாமீன் மனுக்களையும் விசாரிக்கவில்லை, ஜாமீன் மனுக்களுக்கு முறையான நடைமுறை உள்ளது. நவம்பர் 5 ம் தேதி நடக்கும் விசாரணைக்கு முன்னர் முறையான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்" என்றார். (ஐ)

## பிரான்ஸ் மியூசியத்தில் கொள்ளையடிக்கப்பட்ட நகை மதிப்பு ரூ.900 கோடி: 3 நாட்களுக்கு பிறகு திறப்பு



பிரான்ஸ் தலைநகர் பாரீசில் புகழ்பெற்ற லூவர் அருங்காட்சியகத்தில் கடந்த 19ம் தேதி பட்டப்பகலில் நடந்த கொள்ளை சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. காலை 9.30 மணிக்கு அருங்காட்சியகம் திறக்கப்பட்ட சிறிது நேரத்தில் வெறும் 4 நிமிடத்தில் கொள்ளையர்கள் ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்து பிரான்ஸ் அரச குடும்பத்து நகைகளை திருடிச் சென்றனர்.

அரச கிரீடம் உட்பட சில நகைகள் அருங்காட்சியகத்தின் அருகே மீட்கப்பட்ட நிலையில், பிற பொருட்கள் கைப்பற்றப்படவில்லை. இந்நிலையில், திருட்டு சம்பவத்திற்கு பின் அருங்காட்சியகம் மூடப்பட்ட நிலையில், 3 நாட்களுக்குப் பிறகு நேற்று திறக்கப்பட்டது.

பொதுமக்கள் பார்வையிட அனுமதிக்கப்பட்டாலும், திருட்டு நடந்த அப்போலோ காட்சி கூடம் மட்டும் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கொள்ளை போன நகைகள் மதிப்பு ரூ.900 கோடி என விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார். ஆனால் அதன் பாரம்பரியத்தை ஒப்பிடுகையில் அவை விலைமதிப்பில்லாதவை. இந்த விவகாரத்தில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. கொள்ளையர்களை பிடிக்க சுமார் 100 போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

## முதல்முறையாக ரஷ்யாவின் 2 பெரிய எண்ணெய் நிறுவனங்கள் மீது முழு பொருளாதாரத் தடைகளை விதித்தது அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம்!



ரஷ்யாவின் 2 பெரிய எண்ணெய் நிறுவனங்களான **Rosneft** மற்றும் **Lukoil** மீதும், அவைகளின் பல்வேறு துணை நிறுவனங்களின் மீதும் பொருளாதாரத் தடைகளை அமெரிக்க அரசு விதித்தது. உக்ரைன் போர் குறித்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் இல்லாததால், ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்க புதிய தடைகளை விதிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது(ஐ)

## போதை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நெஞ்சு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவர் நேற்று புதன்கிழமை இரவு தொழிலுக்காகக் கடலுக்குள் சென்றுள்ளார். இன்று அதிகாலை 3 மணியளவில், தனது மனைவிக்குத் தொலைபேசி ஊடாக தனக்கு நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அவரது மனைவி கடற்றொழில் சமாசத்துக்கு அறிவித்ததை அடுத்து, கரையில் இருந்து கடற்றொழிலாளர்கள் சிலர் கடலுக்குச் சென்று நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்ட மீனவரை மீட்டு கரை திரும்பினர்.

அவரைக் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது

இரண்டு பிள்ளைகளின் தந்தையான மீனவரின் இழப்பு அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தூக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெண்களும் உள்ளனர். தூக்கிலிடப்படவுள்ள 805 ஆண்களில் 5 பாடசாலை மாணவர்களும் அடங்கியுள்ளனர்.

தென் மாகாணம்தான் பாதாள உலக நடவடிக்கைகளில் முதலிடத்தில் உள்ளது. இவ்வளவு படித்த சமூகம் கூலிக்குக் கொலை செய்யும் சமூகமாக எப்படி மாறியுள்ளது என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

எப்படி பாரிய அளவில் போதைப்பொருட்களைக் கொண்டு வந்து இந்த நாட்டை அழிக்கும் நிலைக்கு அவர்கள் கொண்டு வந்தார்கள்.

இதற்கெல்லாம் மூல காரணம் இந்த நாட்டில் பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள். அவர்கள் நிச்சயமாக தூக்கிலிடப்பட வேண்டும்.

ஏனென்றால் அவர்கள் ஒரு தேசத்தை அழிக்கின்றார்கள். எனவே, பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கட்டாயம் தூக்கிலிடப்பட வேண்டும். அது பாவம் அல்ல." - என்றார்

## என்னைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆவியாக வந்தேனும் பழிதீர்ப்பேன். எனது பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது. என்னைக் கொல்வதற்குத்தான் பார்க்கின்றீர்கள். கொலை செய்தாலும் உங்களுக்குப் பின்னால்தான் நிற்பேன்." - என்றும் சாமர சம்பத் தஸநாயக்க எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

## ரயில் மோதி ஒருவர் மரணம்!

கொழும்பு, ஒக். 23

கொழும்பு, வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு அருகில் பாணந்துறையில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்ற ரயில் மோதி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் கறுப்பு நிற காற்சட்டை மற்றும் வெள்ளை மற்றும் நீல நிறச் சட்டை அணிந்துள்ளார் எனவும், சுமார் 60 வயது மதிக்கத்தக்கவர் எனவும் பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ளனர்.

சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பெக்கோ சமனின் மனைவி தொடர்ந்து விளக்கமறியலில்

கொழும்பு, ஒக். 23

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "பெக்கோ சமன்" என்பவரின் மனைவியான ஷாடிகா லக்ஷானி என்பவரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள "பெக்கோ சமனின்"மனைவியான ஷாடிகா லக்ஷானி என்பவர் கடும் பாதுகாப்பு மத்தியில் இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெக்கோ சமனின் மனைவியுடன் தொடர்பில் இருந்தவர்களுக்குச் சொந்தமான 13 வங்கிக் கணக்குகளைத் தற்காலிகமாக முடக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 'கெஹெல்பத்தர பத்மே', 'கொமாண்டோ சலிந்த', 'பாணந்துறை நிலங்க', "பெக்கோ சமன்", பெக்கோ சமனின் மனைவி உள்ளிட்ட 6 பேர் அடங்கிய பாதாள உலகக் கும்பல் கடந்த ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட பாதாள உலக கும்பலில் இருந்த "பெக்கோ சமன்" என்பவரின் மனைவி ஓகஸ்ட் 29 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டார்.

இவ்வாறு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "பெக்கோ சமன்" என்பவரின் மனைவி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்ட "கெஹெல்பத்தர பத்மே" உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட பாதாள உலகக் கும்பல் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ்

# பிரான்சிலிருந்து துவிச்சக்கரவண்டியில் யாழ் வந்த இளைஞன்





பிரான்சில் பல்வேறு நாடுகளுடன் துவிச்சக்கர வண்டியில் சுமார் 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை கடந்து செவ்வாய்க்கிழமை (22) அன்று பிற்பகல் சூரனின் என்ற இளைஞன் யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர் பூர்வீகமாகக் கொண்ட குறித்த 28 வயதுடைய சூரன் என்ற இளைஞன் இலங்கையின் மகத்துவத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு பொறிமுறையாகவே இந்த துவிச்சக்கர வண்டி பயணத்தை முன்னெடுத்து யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததாக குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து தனது பயணம் குறித்து இவ்வாறு கூறிய அவர் மேலும் தெரிவிக்கையில்

"நான் பாரிஸில் இருந்து குறித்த பயணத்தை கடந்த செப்டம்பர் 01, 2025 அன்று ஆரம்பித்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி, செர்பியா, பல்கேரியா, துருக்கி, ஜார்ஜியா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற பல நாடுகள் வழியாக சுமார் 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை துவிச்சக்கர வண்டியில் பயணித்து செவ்வாய்க்கிழமை (22) அன்று தனது பூர்வீக இடமான நல்லூரை வந்தடைந்தேன்."

யாழ்ப்பாணம் தனது பெற்றோரின் சொந்த ஊர் என்பதால் தாம் எனது பயணத்தின் இறுதி இலக்காக யாழ்ப்பாணத்தின் நல்லூர் கோயிலைத் தேர்ந்தெடுத்திருந்தேன்.

அத்துடன் இலங்கை ஒரு நாடு மட்டுமல்ல, என் பூர்வீகத்துடன் தொடர்புபட்ட என் உன்னத உணர்வு." எனது நோக்கம் தனது குடும்பத்துடன் மீண்டும் இணைவது மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தின் கலாசார முக்கியத்துவத்தை உலகிற்கு வெளிப்படுத்துவதும் ஆகும்.

மேலும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, பிராந்தியத்துடன் வலுவான உணர்வு மற்றும் கலாசார உறவுகளைப் பேணுகின்ற உலகளாவிய தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்தை ஊக்குவிப்பதற்கும் ஒரு மதிப்புமிக்க வாய்ப்பை உருவாக்குவதுமாகும்.

நான் பாகிஸ்தானுக்கு சென்று வர முயற்சித்தேன். ஆனால் அந்நாடு அனுமதி மறுத்திருந்தது. அதன்பின் இந்தியா சென்று கப்பல் மூலம் தனது இறுதி இலக்கான யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளேன் இங்கு எனக்கு சிறப்பான வரவேற்பு கிடைக்கப்பெற்றது.

அத்துடன் நான் இந்த பயணத்தில் கரடுமுரடான சவால்களை எதிர் கொண்டாலும் அந்நாடுகளின் அரசுகளும் மக்களும் எனக்கு மிகுந்த வரவேற்பையும் ஒத்துழைப்பு களையும் தந்திருந்தனர்.

அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை கூறுகின்றேன் என தெரிவித்திருந்தார். அதே நேரம் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் பெற்றோர் பிரான்சில் குடியேறிய நிலையில் சூரனின் சரளமாக தமிழில் தனது உணர்வுகளை பகிர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது .(ஐ)

# மறுகன்னத்தை....

எப்படி வாங்க முடிகிறது? எத்தனை அப்பாவி குழந்தைகள் இதில் பலியாகி உள்ளார்கள்- அவர்களுக்கும் அவர்கள் பெற்றோருக்கும் யார் பதில் சொல்லப்போகிறோம்? இந்த வன்முறைக்கான விதை எங்கிருந்து தூவப்பட்டது? பெண்களுக்குக் கருக்கலைப்பு சட்ட விரோதமானது என்ற சர்ச்சையில் பிறக்காத குழந்தைகளைப் பாதுகாக்க போவதாகக் கூறிய அரசாங்கம், இறந்துபோன இந்தச் சிறுவர்களுக்கு என்ன பதில் சொல்லப்போகிறது? வன்முறை எப்படி அதிதீவிரமாகப் பிள்ளைகளின் மனதில் நஞ்சாக ஊறியிருக்கிறது? இதைக் களைவதற்கு ஒரு சமூகமாக நாம் என்ன செய்யப் போகிறோம்?

இயேசு.கிறிஸ்துவின் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு என்ற இந்த வாசகம் அன்பைப் போதிக்கும். கெடுதல் செய்யும் ஒருவனுக்குக்கூட அன்பைக் கொடு என்பதுதான் இறைத்தூதர்களின் போதனை. ஆனால், அதன் பொருள் நாளடைவில் மருவிவிட்டது. வல்லினங்கள் எல்லாக் காலகட்டங்களிலும் மெல்லினங்களை நசுக்கிக்கொண்டே இருக்க முடியாது அல்லது இருக்கக் கூடாது.

எதிர்த்து நிற்க வேண்டும். நம் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். எந்த அடிப்படையிலும் தன்னைத் தாழ்ந்தவன், தாழ்த்தப்பட்டவன் என்று இனம்பிரிப்பதை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள இயலாது. அதைப்போலவே இங்ஙனம் கட்டவிழும் வன்முறையைக் கண்டும் காணாமல் செல்ல இயலாது. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தை இனியும் காட்ட இயலாது. பிறரை அடிக்க முற்படும் முன் தன் கன்னத்தையும் அடிப்பவன் தயார் செய்துகொள்ளட்டும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.10.2025 வெளியிடப்பெற்றது.